IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

Crl.M.P.No. 324-2025

Deposition of Complainant

Name	: ராஜவேலு	Defence	:
Father Name	: தியாகராஜன்	Court	:
Village	: சீர்காழி	Taluk	:
Calling	:		
Age	: 53/2025		

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 18.07.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

முதல் விசாரணை:–

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

கடந்த 16.04.2025 தேதியிட்ட ரூ.15,00,000/–த்திற்கான SBI வங்கி, நெய்வேலி கிளையின் 707726 என்ற எண் கொண்ட காசோலையின் அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொறையார் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியால் No Such Account என்ற காரணத்துடன் 21.04.2025 அன்று திருப்பப்பட்ட திருப்புதல் குறிப்பாணையின் அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.05.2025 அன்று புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்புகளானது Addressee left without Instruction என திருப்பப்பட்ட உறையுடன் கூடிய அஞ்சல் **ம.சா.ஆ.4** மற்றும் **ம.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.